# எம் நாட்டின் நலனுக்காக பொதுவான ஒருமித்த கருத்துடன் இணையுங்கள்

## ஜனாதிபதி கொள்கைப் பிரகடன உரை



**கொழும்பு, பெப். 07**

**கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் பல்வேறு மதங்கள் இனங்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாட்டின் எதிர் காலத்திற்காக அனைவரும் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வர வேண்டிய முக்கியமான தருணம் வந்துள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

**நாட்டைக் கட்டியெழுப்ப அரசு ஆரம்பிக்கும் வேலைத் திட்டத்தில் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்தால் மாத்திரமே இந்த வேலைத் திட்டத்தை மேலும் விரைவுபடுத்த முடியும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பதவிகளைப் பெற கனவு காணும் சிலர், நாட்டுக்குப் பொய்யான கருத்துக்களை வெளியிடுகின்றனர் என்றும் தெரிவித்தார்.**

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 24 புதன்கிழமை 07.02.2024 கதிர் 176




# போதைப்பொருள் பாவித்த குற்றச்சாட்டு பல்கலைக்கழக மாணவனுக்குப் பிணை

போதைப்பொருள் பாவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவனை மல்லாகம் நீதவான் நீதிமன்றம் இன்றைய தினம் சரீரப் பிணையில் விடுவித்து உத்தரவிட்டது.

வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த பல்கலைக் கழக மாணவனொருவர் வட்டுக்கோட்டை பொலிஸார் தன்னை தாக்கியதாக தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியப் பணிமனையில் முறைப்பாடளித்ததோடு வைத்தியசாலையில் சிகிச் சைக்கும் அனுமதிக்கப்பட்டார்.

இதன்போது குறித்த நபர் போதைப்பொருள் பயன்படுத்தியமை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் உறுதியாகியது.

இந்நிலையில் நேற்று குறித்த மாணவனை கைது செய்த வட்டுக்கோட்டை பொலிஸார் இன்றையதினம் குறித்த நபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபரை பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

பல்கலைக்கழக மாணவர் என்ற அடிப்படையில் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு குறித்த நபரை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பாது தொடர்ச்சியாக கண்காணிக்கவும் உளவள ஆலோசனைக்கும் சமூக சீர்திருத்த நன்னடத்தை பிரிவுக்கு மல்லாகம் நீதவான் எம்.கே.முகமட் கில்மி உத்தரவிட்டார். (O1)

# முன்னாள் கடற்படைத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவு



இலங்கைக் கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் தயா சந்தகிரி ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார்.

கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்புரிமையை இன்று பெற்றுக் கொண்டதுடன் கட்சியின் ஆலோசகராக நியமிக்கப் பட்டுள்ளார். முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்கவும் அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டமை தெரிந்ததே. (அ)

# மக்களிடம் பணமில்லை! மீன் விற்பனை 50% சரிவு

மக்களிடம் பணம் இல்லாததால் மீன் விற்பனை ஐம்பது வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாக பேலியகொடை மத்திய மீன் விற்பனை வர்த்தக சங்கத்தின் செயலாளர் ஜெயந்த குரே தெரிவித்துள்ளார்.

மீன் விற்பனை இவ்வாறு பெருமளவில் குறைந்துள்ளதால், மீன் வியாபாரிகளும், மீனவர்களும் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க சரியான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட வேண்டும் எனவும், நாட்டின் பெரும்பான்மையான மக்கள் உணவு உண்பதில் சுயகட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளதை இந்த மீன் விற்பனையில் ஏற்பட்டுள்ள சரிவு உறுதிப்படுத்தியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெப-07)

# வவுனியாவைச் சேர்ந்த ஐந்து பேர் தமிழகத்தில் அகதிகளாகத் தஞ்சம்

இலங்கையில் தொடரும் பொருளாதார நெருக்கடியால் 3 குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 தமிழர்கள் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த நந்தகுமார், அவரது மனைவி நித்யா மற்றும் அவரது 3 குழந்தைகள் நேற்று மாலை மன்னாரில் இருந்து ஒன்றரை இலட்சம் ரூபா கொடுத்து பைப்பர் படகில் புறப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று அதிகாலை இராமேஸ்வரம் அடுத்துள்ள தனுஷ்கோடி அரிச்சல்முனை முதலாம் மணல் திட்டில் கடற்கரையில் இறங்கியுள்ளனர்.

தகவல் அறிந்த இராமேஸ்வரம் மரைன் பொலிஸார், இலங்கைத் தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்குப் பின்னர் 5 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்படவுள்ளனர். (அ)

# துப்பாக்கிச்சூடு நடத்தி டிப்பருடன் மூவரை மடக்கிப் பிடித்த பொலிஸ்



யாழ். புத்தூர் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டு மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று காலை பளையிலிருந்து சட்ட விரோதமான முறையில் மணலை ஏற்றி வந்த டிப்பர் ரக வாகனம் புத்தூர் பகுதியில் வைத்து பொலிஸாரால் இடைமறிக்கப்பட்டது.

வாகனம் மறிக்கப்பட்ட போது பொலிஸாரை உதாசீனம் செய்த சாரதி வேகமாகச் சென்று புத்தூர் பிரதான வீதி ஊடாக சிறுப்பிட்டி, ஆவரங்கால் உள்ளிட்ட பல பாதையில் ஊடாக சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாக வேகமாக தப்பிச் சென்றுள்ளார்.

வாகனத்தைத் பின்தொடர்ந்து துரத்தி வந்த பொலிஸார் பாடசாலை மாணவர்கள் பயணித்துக் கொண்டிருந்த புத்தூர் பிரதான வீதியை அடுத்து மக்கள் நடமாட்டம் குறைந்த

2 ➤

# இரு பிள்ளைகள் மீது கொடூர தாக்குதல் நடத்தி சமூக வலைத்தளங்களில் பகிர்ந்த தந்தை கைது

ஹட்டன் - திம்புள்ள - பத்தனை பகுதியைச் சேர்ந்த தந்தை ஒருவர் தமது இரண்டு பிள்ளைகள் மீது தாக்குதல் நடத்தி அதனை ஒளிப்பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் பகிர்ந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமது தாய் தொழிலுக்காக வெளிநாடு சென்றுள்ள நிலையில் குறித்த சிறுவர்கள் பத்தனை பகுதியில் உள்ள தமது பாட்டனாரின் பராமரிப்பில் இருந்துள்ளனர்.

இதன்போது, கடந்த 5 ஆம் திகதி குறித்த சிறுவர்களின் தந்தை, அவர்களை தாக்கியதுடன், அதனை ஒளிப்பதிவுசெய்து, குறித்த காணொளியை சமூகவலைத்தளங்களில் பதிவேற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளையடுத்து, லிந்துலை, நாகசேனை பகுதியில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளுக்காக அவர் திம்புள்ள - பத்தன பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட இரண்டு சிறுவர்களும் டிக்கோயா ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதான சந்தேகநபரை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# காலணி மற்றும் தோல் பொருட்கள் கண்காட்சி பெப்ரவரி 8 முதல் 11 வரை கொழும்பில் ஏற்பாடு

பாதணிகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியாளர்கள் சங்கம், கைத்தொழில் அமைச்சு, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியன ஒன்றிணைந்து இம்முறையும் 14 ஆவது வருடமாக இலங்கை காலணி மற்றும் தோல் பொருட்கள் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.

இக்கண்காட்சி பெப்ரவரி 8, 9, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெற அனைத்து நடவடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இங்கு காட்சிப்படுத்தப்படும் பாதணிகள் மற்றும் தோல் பொருட்கள் அனைத்தும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் தயாரிப்புகள் என்பது சிறப்பம்சமாகும்.

நாட்டின் அனைத்து முன்னணி காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியாளர்கள் பங்கேற்கும் இந்த கண்காட்சி, 215 காட்சி கூடங்களை கொண்டிருப்பதுடன் இங்கு பொருட்களை மிகவும் மலிவு விலையில் பெறலாம் என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இது தவிர, வெளிநாட்டு மூலப்பொருள் இயந்திர உபகரண விநியோகஸ்தர்களும் இந்த கண்காட்சியில் பங்கேற்பர். மேலும், உள்நாட்டு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கு தேவையான மூலப்பொருட்கள், இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் புதிய தொழில்நுட்ப கருவிகள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். இந்தத் துறையில் ஈடுபட விரும்பும் தொழில்முனைவோர் தங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெறவும் இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரெப-08)

# அதிவேக நெடுஞ்சாலைகளில் குறைந்த வேகத்தில் வாகனத்தை செலுத்தினால் கடும் நடவடிக்கை

அதிவேக நெடுஞ்சாலைகளில் குறைந்தபட்ச வேக வரம்பை விட இன்னும் குறைந்த வேகத்தில் வாகனத்தை செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தீர்மானித்திருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எம். வீரகோன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நெடுஞ்சாலைகளில் பதிவாகும் பெரும்பாலான விபத்துக்கள் சாரதிகள் நிர்ணயிக்கப்பட்ட வேகத்தை விட குறைந்த வேகத்தில் வாகனம் செலுத்துவதனால் ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ரெப-09)

## இணையப் பாதுகாப்பு சட்டம்!

# மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் கவலை

*சமீபத்தில் இயற்றப்பட்ட இணையப் பாதுகாப்பு சட்டம் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளது.*

*குறிப்பாக இணையப்பாதுகாப்பு சட்ட வரைவு செயல்முறையைச் சுற்றியுள்ள இரகசியம் மற்றும் அதனை நிறைவேற்றுவதற்காக அவசர நோக்கம் குறித்தும் கேள்வியெழுப்பியுள்ளது.*

*இந்தச் சட்டம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் திருத்தங்களை அரசாங்கம் முழுமையாக பின்பற்றத் தவறியதையும் மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.*

*அரசியலமைப்பு பற்றிய கவலைகள் எழுப்பும் அதேநேரம் இது சட்டத்தின் ஆட்சியை பலவீனப்படும் என்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.*

*ஆகவே, அதனை உடனானடியாக இரத்துச் செய்து, இணையப் பாதுகாப்பின் கவலைகளை உரியவகையில் நிவர்த்தி செய்து சட்டத்தை நிறைவேற்றுமாறும் அந்த நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.*

# 43 போலி ஐந்தாயிரம் ரூபா நாணயத்தாள்களுடன் கைது

எகொட உயன பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 43 ஐந்தாயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த போலி நோட்டுகளை அச்சடித்த சந்தேக நபரை கைது செய்து விசாரணை நடத்தியதில், பிற நபர்களுக்கு கொமிஷன் தொகையொன்றை வழங்கி இந்த போலி பண நாணயத்தாள்களை நாடு முழுவதும் பரப்புவதற்கு திட்டம் தீட்டியிருந்தமை தெரியவந்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபருடன் இந்த போலி நாணயத்தாள்களை அச்சிட பயன்படுத்தப்பட்ட கணினியையும் பொலிஸார் கைப்பற்றினர். (ரெப-10)

## துப்பாக்கிச்சூடு நடத்தி டிப்பருடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரவாணி எனும் பகுதியில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு குறித்த டிப்பர் ரக வாகனத்தைத் தடம்புரளச் செய்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கான டிப்பர் ரக வாகனத்தின் டீசல் மற்றும் டயர் மீது துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்ததில் சாரதி உட்பட இருவர் வாகனத்துடன் சேர்ந்து தடம் புரண்டனர்.

இவர்களைக் கடமையிலிருந்த காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிசார் கைது செய்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அந்த டிப்பர் ரக வாகனம் பொலிஸார் துரத்திச் சென்றபோது இடைவழியே ஏற்றி வந்த மணலைப் பறித்தவாறு சென்றதுடன் மீதமிருந்த மணல் வாகனம் தடம் புரண்ட இடத்திலேயே கொட்டிக் கிடந்தது.

தடம் புரண்ட வாகனத்தை கனரக வாகனத்தில் உதவியுடன் தூக்கிய பொலிஸார் வீதியில் இருந்த மணலையும் அப்புறப்படுத்தினர்.

இதன்போது பளைப் பகுதியைச் சேர்ந்த டிப்பரக வாகனத்தின் உரிமையாளர் எனக் கருதப்படும் இளைஞர் ஒருவரையும் அவ்விடத்தில் வைத்து காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் கைது செய்தனர்.

பாடசாலை மாணவர்கள் பயணம் செய்து கொண்டிருந்த அந்தப் பகுதியில் டிப்பர் ரக வாகனம் சட்டவிரோத மணலுடன் வேகமாகப் பயணம் செய்கின்றது என்று காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் கைதான மூவரும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

## எம் நாட்டின் நலனுக்காக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யதார்த்தத்தைப் புறக்கணித்து கனவுகளின் பாதையில் பயணித்தால் நாடு மீண்டும் பெரும் ஆபத்தில் தள்ளப்படும் என்று எச்சரித்த ஜனாதிபதி, பல்வேறு தனிப்பட்ட நலன்களுக்காக நாடு பற்றிய பொறுப்பைப் புறக்கணித்தால் வரலாறு எம்மை துரோகிகள் எனப் பெயரிடும் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரை இன்று ஆரம்பித்து வைத்து ஆற்றிய கொள்கை விளக்க உரையின்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற வளாகத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியை பிரதமர் தினேஷ் குணவர்தன, சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த் மற்றும் ஆளும் கட்சி பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் வரவேற்றனர்.

அதன்போது, நாடாளுமன்ற பிரதான வாயில் முன்பாக பாடசாலை மாணவிகள் ஜெயமங்கல கீதம் பாடினர்.

படைக்கள சேவிதர், பிரதி படைக்கள சேவிதர், சபாநாயகர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம், பிரதி செயலாளர் நாயகம் உள்ளிட்டோர் புடைசூழ நாடாளுமன்ற அவைக்குள் பிரவேசித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தில் தனது கொள்கை விளக்க உரையை நிகழ்த்தினார்.

தமது தனிப்பட்ட கனவுக்காக அல்லாமல் நாட்டின் பொதுவான கனவை நனவாக்கும் நோக்கத்திற்காக புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணையுமாறும் ஜனாதிபதி அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

தன்னைக் கடுமையாக விமர்சித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையானோர் பழைய பகைகளை விடுத்து, நாட்டுக்காக ஒரு பொதுப் பயணத்திற்கு இணங்க முடியுமாக இருந்தால், தம்முடன் நீண்டகாலம் நெருக்கமாகப் பணியாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியினரால் ஏன் அவ்வாறு செயற்பட முடியாது என்று ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

விண்கல் வேகத்தில் வீழ்ந்திருந்த இந்நாட்டின் பொருளாதாரத்தை ரொக்கெட் வேகத்தில் மீண்டும் உயர்துவதற்கு அரசால் முடிந்துள்ளது என்று தெரிவித்த ஜனாதிபதி, இது தனித்துவமான வெற்றி என்றும் சுட்டிக்காட்டினார்.

வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்டெடுப்பது மிகவும் சிரமமானதும் கடினமானதுமான பணியாக இருந்தாலும் ஏனைய நாடுகளைப் போன்று நீண்டகால சிரமங்கள் மற்றும் வலிகள் இன்றி, நாட்டை மீட்டெடுக்க முடிந்தது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சிரமத்துடனும் சில சமயங்களில் தயக்கத்துடனும் அரசு நடைமுறைப்படுத்திய பொருளாதார சீர்திருத்தங்களினால் நாட்டில் நிலையான பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பயணம் சாத்தியமாகியுள்ளது என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமாகும்போது வரிச் சுமையைக் குறைப்பதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும் என்றும் தெரிவித்தார்.

சிக்கலான மறுசீரமைப்பு திட்டத்தை இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் செயல்படுத்த எதிர்பார்ப்பதாகவும், இது பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான அடிப்படை அடித்தளமாக அமையும் என்றும், கடனில் இருந்து விடுபடுவதற்கான பாதையில் இது ஒரு மைல் கல்லாக மாறும் என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (அ)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16 ஆவது பட்டமளிப்பு விழா



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் 16வது பட்டமளிப்பு விழா எதிர் வரும் பெப்ரவரி 10 மற்றும் 11 ஆகிய தினங் களில் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத் தில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடக மாநாடு இன்று பல்கலைக்கழக பிரதான சபை மண் டபத்தில் இடம்பெற்றது.

பெப்ரவரி 10ஆம் திகதி 3 அமர்வுகளும் 11ஆம் திகதி 3 அமர்வுகளுமாக மொத்தமாக ஆறு அமர்வுகளாக பட்டமளிப்பு விழாவை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதலாம் நாளின் முதலாவது அமர்வில் கலை கலாசார பீடத்தைச் சேர்ந்த 342 பட்ட தாரிகளும் இரண்டாவது அமர்வில் இஸ்லா மிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 355 பட்டதாரிகளும் மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறி யியல் பீடம் மற்றும் தொழிநுட்ப பீடம் ஆகிய வற்றைச் சேர்ந்த 430 பட்டதாரிகளும் பட் டம் பெற உள்ளனர்.

இரண்டாம் நாளில் இடம்பெறவுள்ள நான்காவது அமர்வில் முகாமைத்துவ வர்த் தக பீடத்தை சேர்ந்த 314 பட்டதாரிகளும் ஐந்தாவது அமர்வில் கலை கலாசார பீடத்தை சேர்ந்த வெளிவாரி பட்டதாரிகள் 350 பேரும் ஆறாவது அமர்வில் முகாமைத்துவ பீடங்களை சேர்ந்த வெளிவாரி பட்டதாரிகள் 361 பேரும் பட்டங்கள் பெறவுள்ளனர்.

இதனடிப்படையில் மொத்தமாக 1441 உள்வாரி பட்டதாரிகளுக்கும் 711 வெளிவாரி பட்டதாரிகளுக்குமாக மொத்தம் 2152 பட்ட தாரிகளுக்கு இந்த பட்டமளிப்பு விழாவின் போது பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் குறித்த பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் நெறிப்படுத்தலிலும் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத் தரணி பாயிஸ் முஸ்தபா அவர்களது தலை மையிலும் இடம்பெற்றவுள்ளது.

பட்டமளிப்பு விழாவின் பிரதம அதிதிக ளாக United States-Sri Lanka Fulbright Commission தலைவர் கலாநிதி பேட்ரிக் மெக் னமாறாவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித்தலைவரும் சிரேஷ்ட பேராசியருமான சந்தன உடவத்த வும் கலந்துகொண்டு பட்டமளிப்பு உரை யினை ஆற்றவிருக்கின்றனர்.

பட்டமளிப்பு நிகழ்வின்போது தொழிநுட்ப பீடத்தினால் பரிந்துரைக்கப்பட்ட மொறட்டுவ பல்கலைக்கழக பேராசிரியரான பியசிறிக்கு கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக் கப்படவுள்ளது.

அத்துடன் பல்கலைக்கழக ஊடக பிரிவின் நெறிப்படுத்தலில் எதிர்வரும் பட்டமளிப்பு நிகழ்வு வரலாற்றில் முதல்தடவையாக பல்கலைக்கழகத்தின் இணையத்தளத் தினூடாக நேரடியாக ஒலி, ஒளிபரப்பு செய் யப்படவுள்ளமை குறிப்பிடக்க அம்சமாகும். இதற்கென விஷேடமாக வடிவமைக்கப்பட்ட இணையத்தள பக்கமும் பத்திரிகையாளர் மாநாட்டின் போது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஊடகவியலாளர்கள் சந்திப்பில் உப வேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கருடன் இணைந்து பட்டமளிப்பு விழா குழு தலை வர் பேராசிரியர் எம்.பி.எம் இஸ்மாயில், பதில் பதிவாளர் எம்.ஐ.எம். நௌபர், ஊடகப் பிரிவு இணைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எப்.எச்.ஏ. ஷிப்லி மற்றும் உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்சந்தை



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தொழில் வழிகாட்டல் பிரிவி னால் ஏற்பாடு செய்யப்பட்ட திருகோண மலை மாவட்ட இளைஞர் யுவதிகளுக் கான தொழிற்சந்தை இன்று திருகோண மலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

"76 ஆவது சுதந்திர தினத்தை முன் னிட்டு 76 இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்குதல்" என்ற தொனிப்பொரு ளில் இவ்வேலைத்திட்டமானது நடைபெற் றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப்பணிப்பாளர் பி.ஆர்.சுமித்கொட்டின் கடுவ, தொழில் வழிகாட்டல் உத்தி யோ கத்தர் எஸ்.ஸ்ரனி, இளைஞர் சேவை உத்தி யோகத்தர் எ.என்.பிரபாத் தில்ருபன் பண்டார, ஏனைய பிரதேச செயலக இளை ஞர் சேவை கள் உத்தியோகத்தர்கள், தொழில் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் 250 இற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.



# மிதி வெடி

*நேற்று முழுக்க முகப் புத்தகத்திலை எங்கட செஞ்சொற் செல்வர் தான் பேசுபொருள்!*

*அவர் ஒரு ஆன்மீகச் சொற்பொழிவாளர். அந்தக் காலம் தொட்டு தனக்குத் தெரிஞ்ச விசியங்களைத் தன்னுடைய சனத்துக்குத் சொல் லிக் குடுத்து, தன்னோட சேர்ந்தவர்களை நல்ல வழியில பயணிக்கச் செய்ய வேணும் எண்டதுக்காகத் தன்னையே அர்ப்பணிச்சு வேலை செய்யுறார்.*

*என்னன்ண உன்ர "ட்ரக்" உதில்லையே? நீ லேசுப்பட்ட ஆளில்லை.. ஒருத்தரையும் புகழ மாட்டியே..? உதென்ன இண்டைக்கு இப்படிச் சொல்லுறாய்..? நீங்கள் உங்களுக்குள்ள கதைக்கிறது இங்க எனக் கும் கேக்குது. உள்ளதை உள்ளபடி சொல்லலத் தானே வேணும்?*

*குறை சொல்லுறது மட்டும் எங்கட நோக்கமில்லைப் பாருங் கோ...! குறையளைச் சுட்டிக் காட்டினாத் தானே, அவரவர் தங்களைத் திருத்திக் கொள்ளுவினம்?*

*எங்கட ஆக்களின்ர "வீக்னஸ்" இது தான் பாருங்கோ...! ஒருத் தன் நல்லா வாறான் எண்டா மனம் பொறுக்காது. நாலு காசு சம்பா திக்கிறான் எண்டாத் தாங்காது. நல்ல பேர் வாங்கினால் அதை எங்களால சீரணிக்க முடியாது.*

*அந்த மனுசன் தன்னை ஒறுத்து, மற்றவைக்காக வாழுது. காசு தந்தாத்தான் கருத்துச் சொல்லுவன் எண்டு மேடை ஏறுகிற ஆக்கள் இருக்கிற அதே மண்ணில வாழுற இந்தாள் மட்டும் ஏன் தனக் கெண்டு வாறதெல்லாத்தையும் தானம் பண்ண வேணும்?*

*அவரை பசுவுக்கு ஒப்பிடுறவை. தான் கஸ்டப்பட்டு கண்டதையும் மேஞ்சு போட்டு மனுசருக்கு தன்ர ரத்தத்தைப் பாலாகத் தருகிற பசு போல, ஊரெல்லாம் தான் அலைஞ்சு, அரிச்சுப் பொறிச்சு சேர்த்து அதை மற்றவைக்கு குடுக்கிற ஒருத்தருக்கு இப்ப கெட்ட பேர் குடுக் கிறதில குறியா இருக்கினம்.*

*உதெல்லாத்தையும் விடுங்கோ, எங்கட முகப் புத்தகப் போராளிக ளுக்கு யார், எவர் எண்டில்ல தங்களுக்கு எது வருகுதோ அதை அடிச்சு விடுவினம், அது நல்லதோ - கெட்டதோ எண்டில்ல. ஒருத்தர் ஏதாவது போட்டா, நாலு பேர் அதை நல்லமாதிரிக் காவுவினம். எட் டுப்பேர் மேதாவித்தனமா அதுக்கு மேலால கருத்துச் சொல்லுவினம். அது தான் "ட்ரெண்டிங்"!*

*இதில இன்னுமொரு விசியம் - தூக்கிப் பிடிக்கிற விசியம் நாலு நாள் நிண்டு பிடிக்கிறது அதிசயம் பாருங்கோ...*

*ஒரு "ரொப்பிக்" சூடு பிடிச்சுப் போய் கொண்டிருக்கேக்க, அதை நிப்பாட்ட வேணுமெண்டா, இன்னொரு "ரொப்பிக்"ஐ கிளறி விட்டால் போதும், அதை மறந்து இதைக் காவித் திரிவினம்.*

*இது சில நேரத்தில பல பேருக்கு வசதியாப் போயிடும் பாருங் கோ...!*

*தமிழரசில நடந்த தலைமைத் தேர்தலும், தனித்தனியாப் பிரிஞ்சு நிண்டு தபால் வழிச் சண்ட பிடிச்சதும் முகப் புத்தகத்தில் இப்போது முன்னுக்கில்லை.*

*எங்கட கலாசாரம் பற்றி - எங்கட பிள்ளையள் பற்றி - அந்தாள் நல்லதாச் சொன்ன நாலு வார்தைகள் இப்ப இவையளுக்குப் பிரச் சினை!*

*தெரியாமல்தான் கேக்கிறன் அந்தாள் சொன்னதில ஏதும் பிழை இருக்குதோ...?*

*அந்தக் காலத்தில எங்கட பெண் பிரசுகள் பக்குவப்பட்டா நாலாம் ஆளுக்குத் தெரியாது. சடங்கு - சம்பிரதாயத்தோட சரி. ஆனால் இப்ப அப்பிடியே? மேக்கப் எண்டும், போட்டோ எண்டும் போட்டுப் படுத்துற பாடு? உண்மையச் சொன்னா, சாமத்திய வீட்டுப் "போட் டோ சூட்" முடியிறதுக்குள்ள எத்தனையோ கலியாணங்கள் "பிக்ஸ்" ஆகிவிடும்.*

*இதைவிட, இன்னுமொரு புதினம் தெரியுமே? எங்கட காலத்தில அப்பு - ஆச்சி பார்த்துப் போட்டு வந்து கட்டடா தாலிய எண்டு சொல்லக் கலியாண வீட்டண்டுதான் நானும், மனிசியும் முதல் முதலா ஆளைப் பாத்தனாங்கள். இப்ப அப்படியில்ல... "சேவ் த டேற்" எண்டு ஒரு கொஞ் சிக் குலாவல், "பிறைட் ரு பீ", "குரூம் ரு பீ" எண்டு கனக்க...! அதெல் லாம் பிழை எண்டில்ல...*

*ஆனாலும் பாருங்கோ, காலம் காலமாகக் கட்டி வளர்க்கிற கலா சாரம் எண்டு ஒண்டு இருக்குத் தானே?*

*-நரமுனி-*

# காஸா போர் நிறுத்தம் - மத்திய கிழக்குத் தலைவர்களுடன் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் பேச்சுவார்த்தை



காஸாவில் போர் நிறுத்தம் மேற்கொள்வது மற்றும் ஹமாஸ் அமைப்பினரிடமிருந்து பிணைக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக சவூதி அரேபிய பட்டத்து இளவரசர் முகமட் பின் சல்மான், எகிப்து அதிபர் அல்-சிசி ஆகியோருடன் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் அன்டனி பிளிங்கன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

காஸா போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தூதரக ரீதியில் அமெரிக்கா மேற்கொண்டு வரும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் பிளிங்கன் தலைமையிலான குழு பிராந்திய நாடுகளில் தனது சுற்றுப் பயணத்தை திங்கட்கிழமை தொடங்கியது.

காஸாவில் கடந்த ஒக்டோபர் மாதம் போர் தொடங்கியதற்குப் பிறகு அந்தப் பிராந்தியத்தில் பிளிங்கன் மேற்கொள்ளும் 5 ஆவது சுற்றுப் பயணம் இதுவாகும்.

பயணத்தின் முதல் கட்டமாக சவூதி அரேபியா தலைநகர் ரியாதை திங்கட்கிழமை சென்றடைந்த பிளிங்கன், அங்கு பட்டத்து இளவரசர் முகமட் பின் சல்மானை சந்தித்துப் பேசினார்.

அதனைத் தொடர்ந்து எகிப்து வந்த பிளிங்கன், அந்த நாட்டு அதிபர் அப்தெல் ஃபட்டா அல்-சிசியை தலைநகர் கெய்ரோவில் நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இந்தச் சுற்றுப் பயணத்தின்போது, காஸாவில் மனிதாபிமான உதவிகளை மேற்கொள்வதற்கும், ஹமாஸ்-இஸ்ரேல் இடையே கைதிகள் பரிமாற்றம் மேற்கொள்வதற்கும் வசதியாக சண்டையை உடனடியாக நிறுத்திவைப்பதற்கான ஒப்பந்தத்தை உருவாக்க பிளிங்கன் தலைமையிலான குழு முயற்சிக்கும் என்று அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அந்த முயற்சி வெற்றி பெற்றால், குண்டுவீச்சால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள காஸாவை மறுசீரமைப்பது, அந்தப் பிராந்தியத்தை நிர்வகிப்பதற்கான அமைப்பை உருவாக்குவது, இறுதியாக, தனி பாலஸ்தீன தேசம் அமைப்பது ஆகியவற்றை நோக்கி பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கத் தூதுக் குழுவினர் கூறினர்.

அண்மையில் ஏற்பட்ட போர் நிறுத்தத்தை மேலும் நீடிப்பதற்கான பேச்சுவார்த்தை முறிந்ததைத் தொடர்ந்து காஸா மீதான தாக்குதலை இஸ்ரேல் மீண்டும் தொடர்ந்தது.

இந்தச் சூழலில், மீண்டும் போர் நிறுத்தம் மற்றும் கைதிகள் பரிமாற்றத்தை மேற்கொள்வதற்காக இஸ்ரேலுக்கும், ஹமாஸுக்கும் இடையே நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் நிலையில், அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சரின் மேற்கு ஆசியப் பயணம் போர் நிறுத்தத்துக்கான நம்பிக்கையை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (04)

# நேருவின் புகழுக்கு களங்கம் விளைவிக்க வேண்டும் என்பதே நரேந்திர மோடியின் நோக்கமாக உள்ளது என குற்றச்சாட்டு!

## காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் பதிவு

'நாட்டின் முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேருவின் புகழுக்கு களங்கம் விளைவிக்க வேண்டும் என்பதே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் நோக்கமாக உள்ளது. அதுவே மக்களவையில் அவரது பேச்சின் மூலம் வெளிப்பட்டுள்ளது' என்று காங்கிரஸ் விமர்சித்துள்ளது.

மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கு திங்கட்கிழமை பதிலளித்து பேசிய இந்தியப் பிரதமர் மோடி, 'இந்தியர்களை சோம்பேறிகள் என்றும், புத்திசாலித்தனம் குறைந்தவர்கள் என்றும் நேரு கருதினார். அவரது உரையில் நம்மை அடிமைப்படுத்திய நாடுகளின் மக்கள் சிறப்பாகப் பணியாற்றக் கூடியவர்கள் என்ற கருத்தும், இந்தியர்கள் திறமையற்றவர்கள் என்ற கருத்துமே மிகுந்திருந்தது.

நேருவின் மகள் இந்திராவும் இதே கருத்தைக் கொண்டிருந்தார். தங்கள் குடும்பம் மட்டுமே இந்த நாட்டை ஆளப் பிறந்தவர்கள் என்ற எண்ணம் அவர்களிடம் மேலோங்கி இருந்தது' என்று பேசினார்.

இதற்கு காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், 'பாஜகவின் மூத்த தலைவர்களான வாஜ்பாய், அத்வானி போன்றவர்கள் கூட நேரு மீது இதுபோன்ற மிகத்தவறான விமர்சனங்களை முன்வைத்ததில்லை. ஆனால், மோடி தனது பிரதமர் பதவிக்குரிய கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பது கூட தெரியாமல் பேசி



வருகிறார்.

அவர் மக்களவையில் பேசியது அபத்தத்தின் உச்சம். நேருவின் புகழுக்கு களங்கம் விளைவிக்க வேண்டும் என்பதே அவரது நோக்கமாக உள்ளது. அதுவே அவரது பேச்சில் வெளிப்பட்டுள்ளது.

அவர் நேருவை அரசியல் ரீதியாக விமர்சிக்கவில்லை. தனிப்பட்ட முறையில் மிகவும் அவதூறாக விமர்சித்துள்ளார். இது மோடியின் மோசமான மனப்பான்மை மற்றும் காழ்ப்புணர்வையே வெளிப்படுத்துகிறது. மிகவும் சாமர்த்தியமாக பேசுவதாக மோடி கருதிக் கொள்கிறார். ஆனால், வகிக்கும் பதவிக்குரிய கண்ணியம் அவரிடம் இல்லை' என்று கூறியுள்ளார். (04)

# ட்ரம்ப்புக்கு சட்டப்பாதுகாப்பு வழங்க முடியாது தேர்தல் வழக்கில் அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு



கடந்த 2020 ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் தனது தோல்வியை மாற்றியமைக்க முயன்றாகத் தொடரப்பட்ட வழக்கிலிருந்து அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப்புக்கு சட்டப்பாதுகாப்பு வழங்க முடியாது என்று அந்த நாட்டு நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

இது குறித்து கொலம்பியா மாவட்ட முறையீட்டு நீதிமன்றம் வெளியிட்டுள்ள தீர்ப்பில், அதிபர் பதவியில் இருந்தவர்களின் செயல்பாடுகள் சட்ட நடவடிக்கைகளிலிருந்து விதிவிலக்குக்கு உள்பட்டவை. என்றாலும், அத்தகைய விதிவிலக்குகளை ட்ரம்ப் செயல்பாடுகளின் குற்றவியல் தன்மை விஞ்சுவதாக அமைந்துள்ளது.

எனவே, 2020ஆம் ஆண்டு அதிபர் தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முயன்றதாக விசாரிக்கப்படுவதிலிருந்து அவருக்கு சட்டப் பாதுகாப்பு அளிக்கமுடியாது, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தத் தீர்ப்பை எதிர்த்து ட்ரம்ப் மேல்முறையீடு செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க அதிபராக கடந்த 2017ஆம் ஆண்டு முதல் பொறுப்பு வகித்து வந்த டொனால்ட் ட்ரம்ப், 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடனை எதிர்த்துப் போட்டியிட்டார்.

அதில் ஜோ பைடன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. எனினும், அந்தத் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாக ஆதாரமற்ற குற்றச்சாட்டை ட்ரம்ப் தொடர்ந்து சுமத்தி வந்தார்.

தேர்தல் வெற்றியை ஜோ பைடன் தன்னிடமிருந்து "திருடி'க்கொண்டதாக ட்ரம்ப் கூறியிருந்தார்.

இந்த நிலையில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பைடனிடம் ஆட்சிப் பொறுப்பை வழங்குவதற்கு வழிவகை செய்யும் வெற்றிச் சான்றிதழ் அளிப்பு நிகழ்ச்சி நாடாளுமன்றத்தில் கடந்த 2021 ஜனவரி 6 ஆம் தேதி நடைபெற்றது.

எனினும், அந்த நிகழ்ச்சியை நடத்தவிடாமல் ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் நாடாளுமன்றக் கட்டடத்தில் அத்துமீறி நுழைந்து கலவரத்தில் ஈடுபட்டனர். இதில் 5 பேர் உயிரிழந்திருந்தமையும் நினைவுகூரத்தக்கது. (04)

# வீட்டுச் சிறை வைப்புக்கு எதிர் நடவடிக்கை இம்ரான் கானின் மனைவி மேல்முறையீடு



பரிசுப் பொருள் முறைகேடு வழக்கிலும், மதவிரோத திருமண வழக்கிலும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் மனைவி புஷ்ரா பீபி, வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதற்கு எதிர்ப்பு தெரிவித்து மேல்முறையீடு செய்துள்ளார்.

இது குறித்து இஸ்லாபாத் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், இம்ரான் கான் சிறைவைக்கப்பட்டுள்ள அடியாலா சிறைச்சாலைக்கே தன்னையும் அனுப்பவேண்டும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இம்ரான் பிரதமராக இருந்தபோது சவூதி அரேபிய பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானிடமிருந்து பரிசாகப் பெற்ற 157 கோடி மதிப்பிலான ஆபரணங்களை வெறும் 90 லட்சமாக மதிப்பிட்டு விலைக்கு வாங்கிய வழக்கில் இம்ரானுக்கும், புஷ்ராவுக்கும் ஊழல் தடுப்பு நீதிமன்றம் கடந்த வாரம் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

அதையடுத்து, வேறு வழக்குகள் தொடர்பாக இம்ரான் கான் சிறைவைக்கப்பட்டிருந்த அடியாலா சிறைக்கு வந்த புஷ்ரா பீவி போலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

எனினும், அங்கிருந்து இஸ்லாமாபாதிலுள்ள இம்ரானின் இல்லத்துக்கு அழைத்துவரப்பட்ட அவர், அங்கேயே சிறை வைக்கப்பட்டுள்ளார்.

பரிசுப் பொருள் முறைகேடு தவிர, இஸ்லாம் மதத்துக்கு எதிராக திருமணம் செய்துகொண்டதாக இம்ரானுக்கும், புஷ்ராவுக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை நினைவுகூரத்தக்கது. (04)

# மருதமுனை அல்-ஹம்றா மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு




(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம். எம். முஹம்மட் நியாஸ் தலைமையில் கடந்த 4 அம் திகதி நடைபெற்றது.

நாட்டின் 76வது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரை கல்வி பயிலும் தேவையுடைய மாணவர்களுக்கு கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அனுசரணையில் இந்த கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பு செயலாளருமான ரஹ்மத் மன்சூர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகளை வழங்கி வைத்து விசேட உரையினையும் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான ஏ.எல்.எம்.முஸ்தபா (ஷரீப்), எம்.எஸ். உமர் அலி, எம்.ஐ.எம். ராஜாப்டீன், ஆகியோரும் பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எஸ்.கே.வீரசிங்க, பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பாடசாலை நலன் விரும்பிகள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பகுதி தலைவர்கள், பெற்றோர்கள், ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது பாடசாலையின் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் அதிதிகளினால் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# கல்முனை வைத்தியசாலைகளுக்கு புதிதாக வைத்தியர்கள் நியமனம்

(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்கு புதிதாக 14 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்புதிய வைத்தியர்களுக்கான அறிமுக நிகழ்வும் புதிய சேவை நிலையங்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றன.

கல்முனை பிராந்திய திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிரினால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு நிருவாகப் பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்நிகழ்வு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரிவுத் தலைவர்கள் தத்தமது பிரிவுகள் தொடர்பான அறிமுகத்தினையும் சேவைகளையும் பிரிவுகளினால் முன்னெடுக்கப்படுக்கின்ற செயற்றிட்டங்களையும் விரிவாக விளக்கினார்கள்.



இந்நிகழ்வின்போது புதிதாக நியமனம் பெற்ற வைத்தியர்களுக்கு புதிய சேவை நிலையங்களுக்கான கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# சாய்ந்தமருது யூனிவர்சல் முன்பள்ளி வருடாந்த பட்டமளிப்பு விழா




(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது யூனிவர்சல் முன்பள்ளியின் வருடாந்த பட்டமளிப்பு விழா சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் அதன் தவிசாளர் ஏ.ஆர். ஜுபீர் மற்றும் பணிப்பாளர் ஜனாபா ஜுபிர் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக தேர்தல்கள் சீர்திருத்தம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உறுப்பினரும், முன்னாள் பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினருமான ஏ.எல்.எம்.சலீம், தென் கிழக்கு பல்கலைக்கழக ஆங்கிலத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அப்துல் ரஹ்மான் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், சிரேஷ்ட சட்டத்தரணி அப்துல் ரசாக், சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல். நசார் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் பங்கேற்றனர். பெற்றோர் ,ஆசிரியர்கள் மற்றும் என மாணவர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ரோட்டரி மாவட்ட ஆளுநர் கல்முனைக்கு விஜயம்!

(வி.ரி. சகாதேவராஜா)

ரோட்டரி மாவட்டம் 3220 இன் மாவட்ட ஆளுநர் ரொட்டேரியன் ஜெரோம் இராஜேந்திரன் நேற்று முன்தினம் கல்முனைக்கு விஜயம் செய்தார்.



ரோட்டரிக் கழகத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு கழகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

பின்னர் அவர் தலைமையிலான கூட்டம் கல்முனை வெள்ளைத் தாமரை மண்டபத்தில் நடைபெற்றது. கழகத்தலைவர் ஏ எல் ஏ. நாசர் தலைமையில், செயலாளர் கே . குகதாசன், பொருளாளர் வீ விஜயசாந்தன் உட்பட சகல அங்கத்தவர்களும் ரோட்டரி மாவட்ட செயலாளர் என். நமனா மற்றும் உதவி ஆளுநர் தி.ரகுராம் ஆகியோரும் பங்குபற்றினர்.



# நயினைச்சித்தரின் 75 ஆம் ஆண்டு குருபூசைத்தினம் இன்று

1897 ஆம் ஆண்டில் நயினாதீவில் ஆறுமுகம் பார்வதி தம்பதிகளிற்கு திருவருளும் குருவருளும் கைகூடி வர ஆறாவது பிள்ளையாக அவதரித்து "முத்துக்குமார்" எனும் பிள்ளைப்பெயர் கொண்டவரே பிற்காலத்தில் ஈழத்துச்சித்தர் வரிசையில் வைத்துப்போற்றப்படும் "நயினைச் சித்தர் தவத்திரு முத்துக்குமார சுவாமிகள்" ஆவார்.

இவர் தனது இளமைக்கல்வியை நயினாதீவு தில்லையம்பல வித்தியாசாலையில் பெற்றுக்கொண்டதுடன் வாலிப வயதில் ஏனையவர்களைப் போலவே தொழில் நிமித்தமாக கொழும்பு சென்றார். அங்கு தன் தமையனாரின் வர்த்தக நிலையத்தில் பணிபுரிந்து வந்தார்.

இதன்போது 1915ம் ஆண்டு ஏற்பட்ட சிங்கள முஸ்லிம் கலவரத்தினை கண்ணெதிரே கண்டு மனிதப்பிறவியின் நிலையாமையை உணர்ந்தார். மனிதப்பிறப்பின் நோக்கத்தை அறிய நாட்டமுற்றார். இவருக்கு இந்தியாவிலிருந்து வந்து கொழும்பில் தங்கிச்செல்லும் இந்திய சந்நியாசிகள் வழிகாட்டியாயினர்.



அக்காலத்தில் கொழும்பு முகத்துவார பகுதியில் வசித்த "ஆனைக்குட்டி சுவாமிகளும்" இவரது ஆத்மீக தேடலுக்கு விடையானார். இவ்வாறே இந்திய கடப்பையூர் சுவாமிகள் ஒருவருக்கு முத்துக்குமார் அடியவராகி அவருடனே கதிர்காம யாத்திரை சென்றபோது வழியில் அவரிடம் தீட்சையும் பெற்றுக்கொண்டார். ஆனால் இதன்பின்பு அச்சுவாமிகள் எவரும் அறியாது சென்றுவிடவே, தாயைத் தொலைத்த கன்றுபோல் ஏங்கினார் முத்துக்குமார். அவரைத்தேடி எங்கும் காணாது ஈற்றில் கைத்துண்டு கவிதையை வைத்துவிட்டு காணாமற் போனார் முத்துக்குமார்.

1933ம் ஆண்டில் நடைபெற்ற நயினை அம்பாளின் வருடாந்த மகோற்சவத்தில் நீண்ட சடையும் காவி உடையுமாக தோன்றிய சுவாமிகளை தம் ஊரார், சுற்றத்தார் இன்னாரென கண்டுகொள்ள நீண்ட நாட்களாகியது. இருப்பினும் உறவுகள் வருந்தி அழைத்தும் எவரிடமும் அண்டாது உறவெல்லாம் துறந்து துறவியாராக அங்குள்ள ஆலயங்களிலும் மடங்களிலும் தங்கி வந்ததுடன் பின்னாளில் தமது யாழ்ப்பாண அன்பர்களில் ஒருவரது சிவலிங்கப்புளியடி இல்லத்தில் தங்கிச் செல்வதை வழக்கமாக்கிக்கொண்டார.

இக்காலத்தில் இணுவில் பரமானந்தவல்லி ஆச்சிரமத்தில் "வடிவேற்சுவாமி" எனும் அன்பருடன் தங்கியிருந்து அவ்வாலயத்தின் குடமுழுக்கினை செந்தமிழ் ஆகமத்தால் நடாத்திவைத்ததுடன் இணுவில் பெரிய சன்னியாசியாரின் மறைவுக்குப்பின் சிதிலமுற்று புதர்மண்டிப்போன இணுவில் காரைக்கால் சிவன் கோவிலை மீளப்புனரமைக்க காரணகர்த்தாவாக அமைந்தார்.

இக்காலத்தில் தனது தலயாத்திரைகளின் போது மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், கீரிமலை நகுலேச்சரம், கும்பிளாவளை பிள்ளையார் கோவில், திக்கம் கந்தவனம் சுப்பிரமணியர் கோவில், வண்ணார்பண்ணைச் சிவன்கோவில், காட்டுத்துறை அம்பலவாணப் பிள்ளையார், காட்டுத்துறை மகாமாரி அம்மன் கோவில், நல்லூர் முருகன் மற்றும் நயினைப்பதி கோவில்கள் தோறும் சென்று வழிபட்டு அக்கோவில் மூலமூர்த்திகள் மீது அன்பு ததும்பும் பாசுரங்களைப் பாடியுள்ளார்.

மேலும் நயினை அம்பாளின் மீது கொண்ட தீராக் காதலால் நாகேஸ்வரி தோத்திர மாலை, நாகபூசணி அந்தாதி என்பனவும் சிவனின் பெருமை கூறும் நமச்சிவாய மாலை சைவசித்தாந்த விளக்கமாக உண்மை அறிவிளக்கம் என்பவற்றையும் பாடியருளியுள்ளார்.

இந்நாட்களில் சுவாமிகளின் பெருமை யாழ்ப்பாணத்தவர்களால் உணரப்பட்டு அவரைச்சுற்றி மெய்யன்பர்களின் கூட்டம் பெருகியது. அன்பர்கள் வேண்டி அழைத்த போது அவர்தம் இல்லமேகி தன்னுடன் கூடவே வைத்திருக்கும் இறை விக்கிரகங்களை பூக்களால் அர்ச்சித்து அவ்வூரவர்களையும் அழைத்து பூசை வழிபாடாற்றி, வேண்டும் அடியவரின் உடற்பிணி, மனக்குறை நீக்கி வேண்டியன கிடைக்கப்பெற்று அவர்களை இறை சிந்தனையின்பால் நிலைபெறச் செய்தார்.

அமுதசுரபியாம் நயினாதீவு அம்மனின் வருடாந்த மகோற்சவத்தை நாடிவரும் பக்தர்களின் பசிக்களை நீக்கி அம்பாளை தரிசிக்கவேண்டி அன்னதான திருப்பணிக்கு தேவையான பொருட்கள் அனைத்தையும் யாழ்ப்பாண அன்பர்கள் மூலமாக உற்சவ காலத்திற்கு முன்பே சேகரித்து ஊருக்கு அனுப்பி அன்னதான கைங்கரியத்தை முன்னின்று நடாத்தினார். இன்றும் அங்கு தினமும் நடைபெறும் அமுதசுரபி அன்னதான சபையின் நிகழ்விற்கு அடித்தளமிட்டவர் எமது முத்துக்குமார சுவாமிகளே ஆவார்.

அவ்வாறே மகோற்சவ இறுதிநாளான தீர்த்தோற்சவ நிகழ்வில் அம்பாள் எழுந்தருளி தீர்த்தமாடவென "கங்காதரணி" திருக்குளத்தினை ஊரின் தென்மேற்கு பகுதியில் தனது மேற்பார்வையில் வெட்டுவித்ததுடன் பின்னாட்களில் தனது அடியவரான கரம்பன் க. தம்பையாவின் கனவிற்தோன்றி இரத்தினக்கல் ஒன்றிருக்குமிடத்தை தெரிவித்து அதைவிற்று கற்கேணியாக கட்டப்பணித்து அதனை ஒப்பேற்றியவரும் சுவாமிகளே.

ஒருநாள் சுவாமிகள் வண்ணார் பண்ணையில் தங்கியிருந்த காலத்தில் காங்கேசன்துறை வீதியால்




நடந்து வந்துகொண்டிருந்தபோது சிவதொண்டன் நிலையத்தில் இருந்து தனது சிஷ்யரான செல்லத்துரை சுவாமிகளுடன் வெளிப்பட்ட யோகர் சுவாமிகள் எதிரே வருவது முத்துக்குமார சுவாமிகள் என்பதை கண்டதும் "பெரியவர் வருகிறார், நாங்கள் சற்று வழிவிட்டு ஒதுங்கி நிற்போம்" என தமக்கு கூறியதுடன், இருவரும் ஓரமாக நின்றதாக செல்லத்துரை சுவாமிகளே பிற்காலத்தில் தனது அன்பர் ஒருவருக்கு கூறியுள்ளார்.

இவ்வாறு சமகால ஞானிகளால் மதிக்கப்பட்ட பெருமைக்குரிய முத்துக்குமார சுவாமிகள் அக்கால ஏனைய ஆன்மீகத் தலைவர்களுடன் ஆத்மீகத் தொடர்புகளையும் பேணியுள்ளார். தனது காலத்தில் கந்தர் மடம் வேதாந்தமடத்தில் குருமுதல்வராக இருந்த மகாதேவ சுவாமிகளுடன் நட்பு கொண்டிருந்ததுடன் காலத்திற்கு காலம் அங்கு சென்றுவருவதையும் வழக்கமாக கொண்டிருந்தார். இதன்போது அங்கு ஆச்சிரமத் தொண்டராகவும் இணுவில் பரமானந்த வல்லி ஆலயபரிபாலகராகவும் பிற்காலத்தில் கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம நிறுவுனராகவும் விளங்கியவர் வடிவேற்சுவாமிகள். இவரே முத்துச்சுவாமிகள் மகாசமாதியுற்றபோது அவரது சமாதியை நயினாதீவில் நிறுவி திருநிலைப்படுத்தினார்.

சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டவர்களில் முதன்மையானவர் யாழ்ப்பாணம் அறிந்த "குடையிற்சுவாமிகள்" ஆவார். இவர் 1936ம் ஆண்டு கந்தையா எனும் நாமத்துடன் இளைஞராக இருந்தபோது வடிவேற்சுவாமிகளுடன் நயினாதீவு சென்று அங்கு சுவாமிகளால் அமைக்கப்பட்ட கங்காதரணி திருக்குளத்தில் நீராடி முத்துச்சுவாமிகளின் பாதம் பணிந்து எனக்கும் வழிகாட்ட வேண்டும் எனவேண்டி நின்றார். இவ்வாறு அருளாசிபெற்ற கந்தையாவே பின்னாளில் பார்போற்றும் குடைச்சுவாமிகள் ஆனார்.

சுவாமிகளிடம் கொழும்பில் இருந்துவந்து நயினாதீவில் அருளாசிபெற்ற இராமச்சந் திரா எனும் இளைஞரே சுவாமிகளால் இந்தியாவில் ரமணமகரிஷியிடம் சிஷ்யராக அனுப்பப்பெற்றதுடன் இவரே பின்னாளில் கொழும்பு இல்லறஞானி இராமச்சந்திரா சுவாமிகள் எனப்பெயர் பெற்றார். முத்துச் சுவாமிகளிடத்தில் அளவற்ற அன்புகொண்டு அவர் இருக்குமிடமெல்லாம் தேடிச்சென்று தரிசித்ததாக 1958 இல் வெளிவந்த ஆத்மஜோதி விசேடமலரில் ஈழத்துச்சித்தர்கள் எனும் நூலில் சிறப்பித்துள்ளார் ஆத்மஜோதி முத்தையா அவர்கள்.

இவ்வாறு இந்தியாவின் திருவண்ணாமலையில் ரமணமகரிஷியுடன் தங்கி தன்னை புடம்போட்ட பொன்னாக மெருகேற்றி மீண்டும் தாய்நாடு வந்து தனது பிறப்பிடத்திற்கும், சைவம் தழைக்கும் யாழ் மண்ணிற்கும் சைவநெறி ஓங்க அரும்பணியாற்றி வாழ்ந்த சுவாமிகள் 1948ம் ஆண்டில் நயினைத் தாயின் மகோற்சவம் முடித்து யாழ் வந்து வண்ணார் பண்ணையில் தன் அன்பர் கந்தப்பசேகரர் வீட்டில் தங்கியிருக்கும் போது அழியவேண்டிய தன்னுடலை அழிக்க நோயை வரவழைத்துக்கொண்டார்.

நோயைப் பாராது சிவசிந்தனையில் திளைத்திருந்த போது தமது அன்பர்களின் நிர்ப்பந்தத்தால் மருத்துவத்தை ஏற்றாலும் தான் சமாதியுறும் காலம், சமாதிவைக்கும் இடம், வைக்கும் முறை, அதற்கு பொறுப்பானவர் என்பவற்றை முற்கூட்டியே தெரியப்படுத்தி அதன்படியே 1949ம் ஆண்டு தை மாதம் 26ம் திகதி பிரதோச காலமும் பூராட நட்சத்திரமும் கூடிய நள்ளிரவுப் பொழுதில் அடியவர்கள் பார்த்திருக்க பத்மாசனமிட்டு நிஷ்டையில் இருந்தவாறே சிவஜோதியுடன் இரண்டறக்கலந்து பரிபூரணமடைந்தார்.

ஸ்தூல சரீரம் நயினாதீவு காட்டுகந்தசுவாமி கோவிலின் பின்புறமாக சமாதி வைக்கப்பட்டு அதன்மேல் சுவாமிகளால் பூசிக்கப் பெற்றுவந்த சிவ பார்வதி விக்கிரகங்களுடன் முருகன் சிலையும் சேர்க்கப்பட்டு சோமஸ்கந்த ஈஸ்வரம் அமைக்கப்பட்டுள்ளதுடன் அதன் அருகில் சுவாமிகளின் அடியவர் கரம்பன் தம்பையா அவர்களால் 1957ம் ஆண்டு அருள் ஒளி நிலையம் எனும் மடமும் கட்டப்பட்டு, இந்திய பலப்பை சித்திரமுத்து அடிகளால் திறந்துவைக்கப்பட்டது.

இன்று நயினைச்சித்தர் பரிபூரணமடைந்த 75ஆம் ஆண்டு நிறைவு குருபூசைத்தினம் சுவாமிகளது சமாதி ஆலயத்தில் சிறப்புற நடைபெறுகின்றது. இதன் பொருட்டு அவரது வரலாறு மற்றும் அவரால் பாடப்பெற்ற பதிகங்கள் அடங்கிய "நயினை ஞானமுத்து" மலர் வெளியிடப்படுவதுடன் அப்பாடல்களை இசையுடன் கூடிய "முத்துக்குமார நாதம்" இறுவட்டாகவும் வெளியிடப்படுகின்றது.

**சற்குருவே துணை.**




## வெள்ளத்தில் குளக்கட்டு உடைப்பு அரச அதிபர் நேரடியாக பார்வை!



(வி.ரி.சகாதேவராஜா)

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாரிய உடைப்பெடுத்த குளக்கட்டை அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்கிரம நேரடியாக சென்று பார்வையிட்டார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள பாலக்கரச்சி தாமரை கேணி குளக்கட்டில் பாரிய உடைவு ஏற்பட்டிருந்தது.

பாலக்கரைச்சி தாமரைகேணி விவசாய அமைப்பு திருக்கோவில் பிரதேச செயலாளர் .தங்கையா கஜேந்திரனிடம் விடுத்த வேண்டுகோளை ஏற்று அவர் நேற்று முன்தினம் விஜயம் செய்தார். இதன் போது விவசாயிகளினால் குளத்தினை புனர்நிர்மாணம் செய்யக்கோரி மகஜர் ஒன்றும் மாவட்ட செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

## வளமான மண் - வளமான அறுவடை சம்மாந்துறை பெரும்போக விழா



(எம்.ஏ.ஏ.அக்தார்)

சம்மாந்துறை சல்மடு கண்ட விவசாயிகளின் பங்களிப்புடன், விவசாய விரிவாக்கல் நிலையம் ஒழுங்கு செய்திருந்த பெரும் போக வேளாண்மை அறுவடை விழா சல்மடு கண்டத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரீ.எம். நழீர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர், உதவி விவசாய பணிப்பாளர், விவசாய பாடவிதான உத்தியோஸ்தர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர், முன்னாள் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், வவுனியா மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் உள்ளிட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

## 43 போலி ஐந்தாயிரம் ரூபா நாணயத்தாள்களுடன் கைது

எகொட உயன பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 43 ஐந்தாயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த போலி நோட்டுகளை அச்சடித்த சந்தேக நபரை கைது செய்து விசாரணை நடத்தியதில், பிற நபர்களுக்கு கொமிஷன் தொகையொன்றை வழங்கி இந்த போலி பண நாணயத்தாள்களை நாடு முழுவதும் பரப்புவதற்கு திட்டம் தீட்டியிருந்தமை தெரியவந்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபருடன் இந்த போலி நாணயத்தாள்களை அச்சிட பயன்படுத்தப்பட்ட கணினியையும் பொலிஸார் கைப்பற்றினர். (ரெப-10)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.02.2024 இல் வெளியிடப்பெற்றது.